15.04.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS. 76/2020

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முருகன் | | |
| **த/பெ** | ராமு | **மதம்** | |
| **கிராமம்,** | விழுப்புரம் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 61/2025 |
| **மாவட்டம்**; | விழுப்புரம் | **தேதி** | |

கூடுதல் இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரம் அடிப்படையில் நீரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். கடந்த 13/03/1992 ந் தேதியில் வாதியின் தகப்பனார் ராமு அவர்களுக்கு தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து சாந்தா அம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகும். கடந்த 27/04/1980 ந் தேதியில் வாதியின் தகப்பனார் ராமு அவர்களுக்கு தாவா 2 ம் அயிட்ட சொத்ததை பொறுத்து தாயார் அம்மாள் மற்றும் இந்திராணி அம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ. 2 ஆகும். கடந்த 21/09/2003 ந் தேதியில் வாதியின் தகப்பனாரின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகும். விழுப்புரம் வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய வாரிசு சான்று

வா.சா.ஆ. 4 ஆகும். கடந்த 25/06/2010 ந் தேதியில் தாவா 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு ராமு கவுண்டரின் மனைவியான சீதாலட்சுமி மற்றும் ராமு கவுண்டரின் குமாரத்திகளான மகாலட்சுமி , ராஜேஸ்வரி, கௌரி, செல்வி, சந்தானலட்சுமி ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் அசல் வா.சா.ஆ. 5 ஆகும். கடந்த 23/06/2010 ந் தேதியில் தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ராமு கவுண்டரின் மனைவியான சீதாலட்சுமி மற்றும் ராமு கவுண்டரின் குமாரத்திகளான மகாலட்சுமி, ராஜேஸ்வரி, கௌரி, செல்வி, சந்தானலட்சுமி ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் அசல் வா.சா.ஆ 6 ஆகும். தாவா 1வது அயிட்ட சொத்து சம்மந்தமாக அரசு வழிகாட்டி மதிப்பீடு வா.சா.ஆ. 7 ஆகும். தாவா 2வது அயிட்ட சொத்து சம்மந்தமாக அரசு வழிகாட்டி மதிப்பீடு வா.சா.ஆ. 8 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**